ஓ.மு.எண்.535/2000/ஆ4
நாள்.17.11.2000.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
காஞ்சிபுரம்.

## சுற்றறிக்கை

பொருள்: பணிகள் - பல்வேறு திட்டங்களின் மூலம் பொதுப் பணித்துறை பராமரிப்பில் உள்ள கட்டிடப்பணிகள் மேற்கொள்ளுதல் - பொதுப்பணித்துறை அங்கீகாரம் பெறுதல் - தொடர்பாக.

பார்வை:
1) தலைமைப் பொறியாளர், பொதுப் பணித்துறை கட்டிடம் உ.செ.பொ/டி9/49826/2000/ 13.09.2000.
2) செயற்பொறியாளர் (பொ.ப.து.) கட்டிடம், இநிவை/எப்1/ 1003எம்/2000/3.11.2000.
3) இதர தொடர்புடைய கட்டுகள்.

*****

பார்வையில் கண்டுள்ள கடிதங்களின்மீது அனைத்து செயற்படுத்தும் அலுவலர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

பல்வேறு திட்டப்பணிகள் மூலம், பொதுப்பணித்துறை பராமரிப்பில் உள்ள கட்டிடங்களில் (அரசு உயர்நிலைப் பள்ளி கட்டிடம், இதர கட்டிடம்) கூடுதல் கட்டிடப் பணிகள் மேற்கொள்ளும் போது சம்மந்தப்பட்ட பொதுப் பணித்துறை அதிகாரிகளிடம் உரிய முன்னேற்பு அனுமதி பெற்று, பணியினை மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் பல்வேறு பணிகள் முடிக்கப்பட்டு, மேற்படி துறையிடம் திரும்ப ஒப்படைக்கப்படாததையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே மேற்படி செயற்படுத்தும் அலுவலர்கள், பொதுப்பணித்துறை வழிகாட்டி முறைப்படி, பணிகளை மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/- த.உதயசந்திரன்,
திட்ட அலுவலர்.

/உ.த்திரவுபடி/

கண்காணிப்பாளர்.
21/11/2000

பெறுநர்:

1) அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள்
2) அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்கள்.
3) அனைத்து நகராட்சி ஆணையர்கள்.

நகல்.

1) செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை (கட்டிடம்) காஞ்சிபுரம்.
2) பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், காஞ்சிபுரம்.
3) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு.